# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூரு] யாழ்ப்பாணம்:- நந்தன வருஷ சித்திரை மீ உச உ செவ்வாய்க்கிழமை (6 May 1952) [இல - கூ]


திருத்தொண்டர் திருநாள்

## வன்றொண்டரை ஈன்று உவந்த இசை ஞானியார்

திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே சிவபெருமானுக்கு வழியடிமை செய்யும் அந்தணர் குலத்திலே தோன்றிய சடையனார் என்னுஞ் சிவாசாரியருக்கு நல்வாழ்க்கைத் துணையாயமைந்து அம்மையார் இசைஞானியார், சுந்தரமூர்த்தி நாயனாரை ஈன்றருளினார். இத்தகைய மாதவத்தை யுடையாராயிருந்த அம்மையார் நடையபுகழ் எம்போலியரால் எடுத்துரைக்குந் தரத்ததோ, அது அத்தன்மைத்தன்று. இவ்வாறு கூறியருளுகின்றார் சேக்கிழார் நாயனார்.

ஒழியாப் பெருமைச் சடையனார் உரிமைச்செல்வத் திருமனையார் அழியாப் புரங்கள் எய்தழித்தார் ஆண்டநம்பி தனைப்பயந்தார் இழியாக் குலத்தின் இசைஞானிப் பிராட்டி யாரை என்சிறுபுன் மொழியாற் புகழ முடியுமோ? முடியாதெவர்க்கும் முடியாதால்

## வாக்காளர்களுக்கு நல்வழி ஒன்றே ஒன்று!

### இது எம் மதத்திற்கும் சம்மதம்

சமயநூல்களின் கூற்றுக்கள்

'அவையே தானேயாய்
இருவினையில்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே

என்பது சிவஞான போதச் சூத்திரம். இதில் அவையே தானேயாய் என்பது, அவையேயாய் — ஆன்மாக்களேயாய் தானேயாய் — இறைவன் தானேயாய், அவையேதானேயாய், ஆன்மாக்களே இறைவனாய் என்று பொருள் தரும். இவற்றுள் அவையே — தானேயாய் இருவினையில் - போக்கு வரவு புரிய ஆணையின் - நீக்கம் இன்றி நிற்கும் என்பது ஆன்மாக்கள் தத்தம் அறிவு நிலைக்கேற்ற உடல்களை எடுத்து நல்வினை தீவினைகளைச் செய்து அவற்றால் வரும் இன்ப துன்பங்களை அநுபவிக்கும்பொழுது இறைவனுடன் பிரிப்பின்றி நின்று இறைவனது ஆணையின் வழியே செய்யும் என்பதை அறிவிக்கின்றது. "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே........ கண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே" அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பன போன்ற அருள்மொழிகள் இவ்வுண்மையை வலியுறுத்தும்

(சைவம்.)

"கடவுள் ஒருவரே உளர். அவர் எங்குமுள்ளவர். எல்லாம் வல்லவர். எல்லாம் அறிபவர். எல்லாவற்றுக்கும் ஆதியும் அந்தமுமாயிருப்பவர்......... வானங்களுக்கும் பூமிக்கும் முதல்வராயிருந்து மக்கள் சிந்தையால் சொல்லால் செயலால் ஆவனஎல்லாம் அறிபவர். அவருடைய ஆணையாலன்றி ஒரு மத்தியஸ்தர் இருக்க முடியாது. அவர் எல்லாம் அறிகிறார். ஆனால் அவர் திருவுளங்கொள்வனவற்றை யன்றி அவர் அறிபவற்றில் எதையும் அவர்கள் அறியமுடியாது.

—(திரு. கூரான் இஸ்லாம்)

கடவுள் ஒருவரே உளர். அவர் தனி முதல்வர். அவர் எல்லாம் அறிபவர். அவர் சர்வ வல்லமையுள்ளவர். யேகோவா என்பது அவரது திருநாமம். உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலாங் குருவிகளை விற்கிறார்களல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல் அவைகளில் ஒன்றாகிலும் தரையில்விழாது"

— (மா. யோ. மத். கிறிஸ்தவம்)

நடப்பன வெல்லாம் திருவருள் வழியே!

கடவுள் நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டுகின்ற வேறு வேறு மூன்று நூல்களிற் காணக்கிடக்கும் ஒரு சில உயரிய அறிவுரைகளை ஈண்டுத் தந்தோம். இவற்றால் அறியக்கிடப்பது என்னெனில், மக்கள் வாழ்க்கையில் நடப்பது எதுவும் கடவுளின் திருவருளையின்றி நடப்பதில்லை. எம் சிந்தனைகள், சொற்கள், செயல்கள் எல்லாம் கடவுளுடைய திருவருள் வழியே நடக்கின்றன என்பதாகும். உண்மை உணர்ந்தோர் இவற்றை முழுதும் உண்மை என்று கூறுவர்.

இவ்வாறு யாவருங் காணமுடியாது!

இந்த உண்மையை இவ்வாறு எந்த நேரமும் கண்டு வாழுவோர் எந்த நேரமும் இன்புற்று வாழுவர். அவர்களைத் துன்பந் தொடர்வதில்லை ஒரோ வழித் தொடர்ந்தாலும் அதனால் சலனப்படுவதில்லை இவ்வாறு மக்கள் ஒவ்வொருவரும் இருக்கிறார்களோவெனில் இல்லை. இருக்க முடியுமோவென்றால் முடியாது. ஏனெனிற் கூறுதும். ஆயுள் அளவு முறையில் — ஆயுள் அளவுக்குத் தக்க உடல் முறையில் — பாலன், விருத்தன் என்ற பருவ வேறுபாடு இருப்பதுபோலவே அறிவு நிலை முறையிலும் வேறுபாடுண்டு. உடல் நிலை யாவராலும் சுட்டி அறியத் தக்கது. அறிவு நிலை சுட்டி அறியமுடியாதது. ஆனால் அறிவுமுதிர்ந்தோர் அறிவு குறைந்தோருடைய நிலையை இலகுவாய் அறிவர். மேலே காணக்கிடக்கின்ற உயரிய உண்மைகளை உள்ளவாறு ஒவ்வொருவரும் அறியமுடியாமலிருப்பதற்குக் காரணம் நாம் எடுத்துக்காட்டிய அறிவு நிலை வேறுபாடேயாம்.

இந்த அறிவு நிலை வேறுபாட்டாலேயே கடவுள், அறம் பாவம், என்னும் இரு வழிகளை வகுத்தி[illegible]

(தொடரும்)

## திரு. R. B. கதிர்காமர்

### எக்கட்சி அபேட்சகருமல்லர்

பொதுவுடைமைக் கட்சியினரின் ஆதரவாளராகத் திரு. கதிர்காமர் போட்டியிடுகின்றார் என்ற அறிவித்தல் உண்மையின்பாற் பட்டதல்லவென்று திரு. கதிர்காமர் மட்டக்களப்பில் நடந்த ஒரு கூட்டத்திற் பேசியிருக்கின்றார்.

"இத்தத் தேர்தலில்தான் ஒரு தமிழ் அரசுக் கட்சி அங்கத்தினராகப் போட்டியிடவில்லை. இங்குள்ள பொது மக்கள் என்னை ஒரு சுயேச்சையாளராகத் தேர்தலுக்கு நிற்கும்படி வற்புறுத்தினார்கள். பொதுமக்கள் சேவைக்காகப் போட்டியிடும்நான் பொதுமக்களுடைய கட்டளைக்குப் பணிய ஒருப்பட்டேன். இதுதான் நான் இன்று ஒரு சுயேச்சையாளனாகப் போட்டியிடுவதன் காரணம்.

"தேர்தலின் பின் எந்தக் கட்சி எந்தக்கொள்கை மட்டக்களப்புப் பொது மக்களுக்கு நன்மை பயக்கும் என்று கருதப்படுமோ அந்தக்கட்சியோடு சேர்ந்து அந்தக் கொள்கையின்படி செயலாற்ற முற்படுவேன்.

"இலங்கையில் எப்போதும் ஒரு ஸ்திரமான அரசாங்கம் அமையவேண்டும் என்ற கொள்கையை உடையவன் நான்.

## தேர்தலுக்காகும் திருக்குறள் 3

புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து —திருவள்ளுவர்.

தேர்தற் புத்துரை:

குன்றி மணியானது மூக்கிலே கருமையும் ஏனைய பாகத்திற் செம்மையும் கொண்டது. தேர்தல் அபேட்சகக் குன்றி மணிகளும் வாக்காளக் குன்றி மணிகளும் வேடம் ஒன்று விஷயம் ஒன்றயிருப்பர். தேர்தல் உலகச் சித்திரம் இதுதான்!

உ

## தாயுநீயே தந்தையு நீயே சங்கரனே

திருச்சிற்றம்பலம்

தாயுநீயே தந்தைநீயே சங்கரனே அடியேன்
ஆயுநின்பால் அன்புசெய்வான் ஆதரிக் கின்றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னுள் ஐவர்நின்றொன்ற லொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவலம்மே யவனே.

திருச்சிற்றம்பலம்

அரசியல் அலை

## இலக்கில்லா இயக்கங்கள்

### மனச்சாட்சிக்கு மாறான செய்கைகள்

### சமுகத்துக்குத் தீங்கிழைக்குஞ் சாதனங்கள்

மதுரையிலே மாபெரும் வரவேற்பளிக்கப்பெற்ற பொழுது சென்னைப் பிரதம மந்திரி திரு. ச. இராசகோபாலாச்சாரி அவர்கள் இந்திய தேசிய மகாசபையின் நிலைமைபற்றிப் பேசும்போது இக்கால அவசரமும் தீவிரமும் இயக்கங்களில் நிற்பவர்களை ஆறுதலாக அமைதியாக யோசித்துக் கருமம் ஆற்ற விடாதிருப்பதுவும், பொதுவாக இலக்கில்லாது ஏகபோகமாக அரசியல் சமுகவியலில் ஈடுபடுவதும் தீங்கை விளைவிக்கின்றன என்று எடுத்துக் காட்டினார்.

இந்தப் புத்திமதி எங்கள் இலங்கை நாட்டுக்கு மிகவும் பொருத்தமானது' இலக்கில்லாததான் இங்கே தலைவர்களும் சரி சங்கங்களும் சரி அரசியலில் ஈடுபடுகின்றன. ஒரு கட்சிக்காக இராப்பகலாக உழைப்பவர் ஒருவரை 'உங்கள் கட்சியின் இலக்கென்ன, பாராளுமன்றத்தில் நீங்கள் செய்துவைக்கப் போட்டிருக்குந் திட்டமென்ன என்று அரசியல் அலைமோதிக் கேட்டபோது இலக்கில்லாத ஓர்நீண்ட பிரசங்கத்தைச் சொன்மாரியாகப் பொழிந்து விட்டாரேயன்றி வினவுக்குப் பதில் இறுத்தாரில்லை.

பேச்சுப் பிரவாகம் வச்சுச் சண்டமாருதம் என்ற பாராட்டுப் பெற்று இருக்கின்ற கட்சிகள் ஏராளமாயுண்டு. இதுவரை எக்கட்சியாவது தங்கள் பாராளுமன்றச் செய்கைத் திட்டத்தை (நடைமுறை) வெளிப்படுத்தவில்லை. வெளிப்படுத்தக்கூடிய இலக்குகள் இவைக்கில்லை என்பதே காரணம்.

வறுமையை நீக்குவோம் என்று சொன்னால் எங்ஙனம் நீக்குவது என்பதற்குப் பதிலே கிடையாது. இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்குள் சிங்களத்தையும் தமிழையும் அரசமொழிகளாக்குவோம் என்று வீராமுழக்கஞ் செய்தவர் இருபத்து நான்கு நாளுக்கிடையிலே சிங்களத்தையே அரசமொழியாக்குவதாக வாக்குமாறிச் சொல்லிவரும் கூற்றுக்களை நம்பியா பாமரசனம் முன்னேறுவது.

எப்படி ஐயா இருபத்துநான்கு மணியில், வேண்டாம இருபத்துநான்கு நாளில் இது கைகூடுமென்றால் ஆந்தைபோல் விழிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஸ்ரீ சித்திரை மீ உ௪ ௨ செவ்வாய்க்கிழமை

## இலங்கை இந்தியர்கள் இயக்கம்

சென்ற பொதுத் தேர்தலிலே வாக்குரிமை பெற்ற இலங்கைவாழ் இந்தியர்கள் இப்பொழுது அவ்வுரிமையில்லாது நிற்கும் நிலைமையை மாற்றி அமைக்க இலங்கை இந்தியத் தேசிய மகாசபை சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்திருக்கின்றது. எவ்வுரிமையைப் பெற்றவர்களிடத்தும் அவ்வுரிமையை எடுத்து விடுவது நியாயமாகாது என்பதை எவரும் மறுக்கமாட்டார். அன்றியும் சமீபத்திற் குலைக்கப்பட்ட பாராளுமன்றத்திலே சென்ற பொதுத் தேர்தலில் இலங்கை வாழ் இந்தியர்கள் சார்பாக ஆறு சனப் பிரதிநிதிகள் இருந்தும் இத்தேர்தலிலே அத்தகைய பிரதிநிதி ஒருவர் தானும் இருக்கமுடியாத நிலைமை உண்டாயிருப்பதைக்கண்டு அதனை மாற்றி அமைக்க ஏற்ற ஒழுங்குகள் செய்யாது எவர்களும் வாளா இருக்க மாட்டார்கள், இந்திய அரசாங்கமும் அந்நாட்டுப் பத்திரிகைகளும் பிறரும் இலங்கைப் பிரதமரிடம் இந்த நிலைமையைச் சீராக்க வேண்டுமென்று கேட்டிருந்தனர். ஆனால் திரு. டட்லி சேனநாயக அவ்வாறு செய்வதற்குக் குலைக்கப்பட்ட பாராளுமன்றம் திரும்பவும் திரட்டப்பட வேண்டுமென்றும் அங்ஙனஞ் செய்வதற்கு இப்போதைய நிலைமை அவகாசம் அளிக்கமாட்டாதென்றும், விளங்கப்படுத்தியுள்ளார். இதற்கிடையில் இலங்கை இந்திய தேசிய மகாசபை சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்திருக்கின்றது.

சத்தியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு இயக்கம் வாய்மையின் அம்சமாகிய அன்பை ஆதரவாகக் கொண்டிருக்குமென்பது உண்மையாகின்ற தன்மையினாலே இலங்கை இந்தியர்கள் ஆரம்பித்திருக்கும் சத்தியாக்கிரக ஒழுங்கைக் கண்டிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. எந்த இயக்கமும் எவ்வித உன்னதமான புனிதக் கொள்கைகளை அகத்தே கொண்டிருந்த பொழுதிலும் நடைமுறையிலே அத்தகைய நோக்கங்களுக்

## எங்கள் அறிவித்தல்

*சித்திரை 27 (9—5—52) வெள்ளிக்கிழமை சித்திரா பூரணைக்காகச் சைவப்பிரகாச இயந்திரசாலையிற் கடமை ஆற்றுவோர்க்கு விடுமுறையாதலின், அன்று இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் வெளிவரா.*

—அதிபர்.

கிசையச் செவ்வனே செய்து நடத்தப் பெறுகிருப்பின் அது ஈற்றில் தீமை பயக்கவேண்டி வரும் என்பதும் உண்மையே. கையாளும் முறைகளும் அவற்றை நடத்துபவர்களும் உள்ளத்தும் புறத்தும் உத்தமர்களாக இருத்தல் வேண்டும் என்று சத்தியாக்கிரக முறையை இந்திய நாட்டிலும் புற தேசத்திலும் வெற்றிகரமாகக் கையாண்ட மகாத்மா காந்தி அவர்கள் பன்முறையும் குறிப்பிட்டது மாத்திரம் அன்றி வற்புறுத்தியும் இருக்கின்றார்.

ஆகவே இலங்கை இந்தியச் சகோதரர்களும் தேசிய மகாசபைத் தலைவர்களும் தாங்கள் ஆரம்பித்திருக்கும் இயக்கம் எவ்வாற்றானும் எந்நேரத்திலும் அதற்குரிய புனிதக் கொள்கைகளினின்றும் விலகாதிருக்கும் வண்ணம் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டிய பொறுப்பையும் கடமையையும் தாங்கி இருக்கின்றார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. எந்தத் தேசத்திலும் தேர்தற் காலம் ஒரு சாதாரண வேளை அன்று. தினைத்துணைக் காரியமும் பனைத்துணையாய்ப் பருத்துப் பெருங்கிளர்ச்சியை உண்டுபண்ணி அமைதியின்மையை ஆக்கி விடக்கூடியது. எல்லாத் தொகுதிகளிலும் அதி தீவிரமான போட்டிகள் நடைபெறுகின்றன. ஏச்சுப் பேச்சுக் கூட்டங்களும் கண்டனப் பிரசாரமும் மலிந்துள்ளன. அமைதியீனத்தை இலேசாக உண்டுபண்ணி விடக்கூடிய இவ்வேளையில் இந்தியச் சகோதரர்கள் தாங்கள் செய்கை முறையிற் கொண்டுவரும் எந்தப் பிரசாரமும் உள்நாட்டு மக்களின் தேர்தலில் ஒருசாராருக்கு உதவியாயிருந்து மறுசாராரை வெகுண்டெழுந்து சமாதான நிலைமைப்பழுது அடையச்செய்ய இடங் கொடுக்கக்கூடாது என்று புத்திமதி கூறுகின்றோம்.

இன்னமும், இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினர் இவ்வியக்கத்திற்கு ஆதரவளிப்பது மல்லாமல் நேராகவந்து சத்தியாக்கிரகப் போராட்டத்திற் பங்குபற்றுவதாகவெளிவந்திருக்கின்றார்கள். எங்கே ஒரு பிளவு, எந்த இடத்தில் ஒரு பிரிவினை என்று [illegible] அங்கே ஓடிப் போய் [illegible] மையையும் தீமையாக்கிவிடும் இந்தப் புரட்சிக்கூட்டத்தவரின் பிரசாரத்தைக் கேட்டதும் இலங்கை அரசாங்கம் பாதுகாப்பு ஒழுங்குகள் செய்ய ஏற்பாடுகள் உண்டுபண்ணுகிறார்கள். இவ்விதமாக ஒரு சாந்தமுடைய சத்திய இயக்கத்தைச் சதா புரட்சியையே மனம் வாக்குக் காயத்தால் அநுசரித்து வரும் கட்சியினர்கள் பழுதுசெய்ய முற்படுவார்களேயானால் அது இறுதியில் என்னாகும்? இலங்கை இந்தியத் தேசியமகாசபை அவ்வித உதவியைத் தாம் நாடவில்லை என்று மறுத்திருந்தபோதிலும் அந்தப் புரட்சியாளரின் ஆதரவு எந்த நேரம் எந்த வகையில் வந்து கலந்துவிடுமோ என்னும் அச்சம், அமைதியை நாடும் இலங்கையருக்குண்டு.

எனவே இலங்கைவாழ் இந்தியர்கள் தங்கள் இயக்கத்தைச் சீராக நடததும் பொறுப்பு மிகவும் பிரமாண்டமானதென்றுணர்ந்து, காலம் ஒரு சாதாரணமான வேளையல்ல வென்பதை அவதானித்துப் புரட்சிக்காரருக்கு ஒரு அருந்தருணத்தைக் கொடுத்துவிடாது மகாத்மா காந்தி அடிகளின் ஞாபகத்துக்கு பழுதுவரவிடாது உண்மைவழி ஓம்பி நிற்பார்களாக. அங்ஙனம் செய்வது இயலாதெனின் இந்த இயக்கத்தை இப்பொழுதுநிறுத் [illegible] நடத்துவார்களாக.

## மங்கல விவாக அன்புபகாரம்

தனது பௌத்திரி சௌபாக்கியவதி நித்திய கல்யாணியின் மங்கல விவாகத்தை முன்னிட்டு, இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்களின் அபிவிருத்திக்காகச் சைவபரிபாலனசபை நிருவாகசபை அங்கத்தவர் திரு. சி. த. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார் அன்போடு வழங்கிய ரூபா ஐம்பதும் உவகையுடன் பெற்றோம். — அதிபர்.

திருத்தொண்டர் திருநாள்

## உண்மை நெறி விளங்கிய உமாபதிசிவாசாரியர்

### கொடிக்கவி பாடிக் கொடி ஏற்றிய கொற்றங் குடியார்

உமாபதிசிவாசாரிய சுவாமிகள் சந்தானசாரியர் நால்வருள் ஒருவர். இவர் சிவாகமங்களைக் கற்றுத் தெளிந்து தில்லைமூவாயிரவருட் சிறந்தவராகிப் பொன்னம்பலமுடையாருக்குப் பூசனைபுரியும் பேறுடையாராய்த் திகழ்ந்தனர்.

#### பகற்குருடு மாற்றப்பட்டமை

ஒரு நாள், வழக்கம்போல நடராசப் பெருமானுக்குப் பூசனை புரிந்தபின், கொடி, குடை, தீபம் முதலிய விருதுகளுடன் சிவிகை மீதிவர்ந்து வீடு சென்றார். அவ்வழியருகே சீடர்களுடன் அமர்ந்திருந்தார் மறைஞானசம்பந்தர், உமாபதியார் வரவைக்கண்ட மறைஞான வள்ளல் 'பட்டகட்டையிற் பகற்குருடு ஏகுதல் பாரீர்'' என்று சீடருக்குக் கூறினர். இவ்விழிமொழியைச் செவிமடுத்த உமாபதியார், தமது பண்டைத் தவத்தின் பயனாகிய பக்குவமுதிர்ச்சி பெற்றாராகவின், உடனே சிவிகைவிட்டிழிந்து, வள்ளலையடைந்து வணங்கித் திருவடித்தொண்டு செய்யத் தொடங்கினர்.

அக்காலத்தில் ஒருநாள் வள்ளலார் சேணிய வீதிக்குச் சென்று கூழ்பெற்றுண்டனர். அவர் உண்ட சேடத்தைச் சிவநிவேதனமெனக் கொண்டு உட்கொண்டார். தில்லை வாழந்தண சிரேட்டர். இவர் முறை பிறழ்ந்தார் என இகழ்ந்தார் தில்லைவாழந்தணர். கூத்தப்பெருமானுக்குப் பூசனைபுரிதலையுந் தடுத்தார்கள். உமாபதியார் கொற்றவன்குடியில் மடமொன்றியற்றிச் சிவபிரானுக்கு விதிப்படி வழிபாடாற்றியமர்ந்தார்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## செய்தித்திரட்டு
=O=

பாகிஸ்தானிலுள்ள மக்கள் சுயாதீனக் கழகமொன்று, எல்லைப்புறக் காந்தி அப்துல்காபர்கான் அவர்களை விடுதலை செய்யுமபடி கேட்டிருக்கின்றது.

X X X

பர்மா, முதலிய மூன்று நாடுகளிலிருந்து அரிசிவரவுக்கு ஒழுங்கு செய்யப்பெற்றிருக்கிறதென அறிய வருகிறது. இந்தியாவிலிருந்து வெங்காயமும் தண்ணையில் வரும்.

X X X

இலங்கை இந்திய சத்தியாக்கிரக இயக்கத்தை நிற்பாட்டுமாறு இலங்கை இந்தியருக்குப் புத்திமதி கூறும்படி இந்திய அரசாங்கத்தை இலங்கை அரசாங்கம் கேட்டது. அப்படிச்செய்தல் எவ்வாற்றானும் முறையன்று என்பது இந்திய அரசாங்கத்தின் மறுமொழி.

## கைதடி நாவற்குழியில் இலவச பால் நிலயம்

1—5—52 வியாழக்கிழமை காலை 8·30மணியளவில் கைதடி நாவற்குழி சமூகசேவா சங்க ஸ்ரீமுருகன் வாசிகசாலைக் கட்டடத்தில் சாவகச்சேரிப் பகுதிப் பால் நிலயங்களின் மேற்பார்வையாளர் திரு. S. கணபதிப்பிள்ளை அவர்களால் ஒரு அரசாங்க இலவச பால்நிலயம் திறந்து வைக்கப்பட்டது. ஷை திறப்பு விழாவில் பெருந்தொகையான கிராமவாசிகள் கலந்துகொண்டனர். 75 க்கு அதிகமான குழந்தைகளும் கர்ப்பவதிகளும் பால் பருகிச் சந்தோஷமடைந்தனர்.

## வாழ்க்கை வானில்

வளர்மதி

#### தேர்தற் திருகுதாளம்!

சொன்னபடி செய்பார் என்றுற சொன்னதையே சொல்ல வேண்டாமா? நாக்கு ஒரு நாளிலே எத்தனை விதமபுரண்டு உருளும்? திரு. தகநாயக ஒரு இடதுசாரித்தலைவர், திரு. பண்டாரநாயக ஐக்கிய தேசியக் கட்சியை விட்டகன்றபொழுது ஒரு கூக்குரல் போட்டார். திரு. பண்டாரநாயகவை நம்பாதீர்கள், நம்பாதீர்கள் என்று காஉலர கவின்றார். சொல்லிய சொற்கள் பதிந்த அச்சுருப்புமையும் உலரவில்லை. அதே திரு. பண்டாரநாயகவுக்கு அதே திரு. தகநாயக புகழ்மாலை சூட்டித் தேர்தற் போட்டியில் ஆசரவளிக்கின்றார்.

#### நாக்கின் போக்கு

தேர்தல் நாடகத்தில் ஊடல் உவகை மாறிமாறி வந்துகொண்டே இருக்கின்றது. ஒரு காட்சியிற் காதலனாவர் மற்றைய வேடத்திற் காதகனாகின்றார், நாக்கும் வாக்கும் நானுபக்கமும் கோக்குகின்றன.

#### பொதுசனம் புத்தி அறிந்துவிட்டது

சீட்டாட்டத்தில் ஒவ்வொரு ஆட்டத்திற்கும் கூட்டுறவு வெவ்வேறுயிருக்கும். தேர்தல் ஆட்டத்திலும் அங்ஙனமே.

இப்பொழுது பொதுசனம் வயதுவந்த நிலைமையில் இருக்கின்றது. தலைவர்கள் சில அலைக்கலையும் நீர்போலத் தடுமாறி நிற்பதை அவதானித்துவிட்டார்கள். ஒருவராவது நாட்டின் நன்மையைக் கருதுபவர்களாகக் கருதப்படமுடியாத வகையில் அரசியல் அலுவல்கள் தலைவர்களை இழுத்துவிட்டன.

#### ஊக்காது ஏற உயரும் கொடி!

பஞ்சவர்ணங்களும் காற்றிற் காட்சி அளிக்கின்றன. திறப்பு முதற்கொண்டு கை ஈறாக அடையாளச் சின்னங்கள் ஆர்ப்பரிக்கின்றன. காலையில் இருந்த கொடி மாலையில் இராது. இரவில் இராத கொடி பகலில் உலாவும், இன்று ஒன்றிருந்த இடத்தில நாளை மற்றது நின்றுலாவும். காரணம் ஊக்கமதுவே,

#### இப்படிச் செய்தால் என்ன?

தேர்தல் நாள் வரைக்கும் உபேட்சகர்கள் தங்கள் கட்சி வர்ண ஆடை அணிந்து தங்கள் சின்னங்களைக் கழுத்திலே தூங்கவிட்டு ஊர்வலமாக உலாவித் திரிந்தால் வேறு பிரசாரம் தேவைப்படமாட்டாதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர்களுக்கு நல்வழி

# ஒன்றே ஒன்று

1-ம் பக்கத் தொடர்ச்சி

விளக்குகின்றார். பாவம் துன்பத்தைத் தரும். புண்ணியம் அல்லது அறம் இன்பத்தைத் தரும். இது எவ்விடத்தும் எஞ்ஞான்றும் நிலையான உண்மை. "அறத்தான் வருவதே இன்பமற்றெல்லாம் — புறத்த புகழுமில" என்பது இதை வலியுறுத்துதல் காண்க. இதை இவ்வாறு உணர்ந்து அறத்தை மேற்கொள்ளுதலே யாவர்க்கும் எளிதல்ல. ஆகையினாலேயே அறஞ் செய்யாதபோதிலும் வாழ்க்கையின் முதற்படியாகப் பாவத்தைச் செய்யவேண்டாமென்று சைவம், கிறிஸ்துவம், இஸ்லாம் பௌத்தம் ஆகிய எல்லா மதங்களும் ஒரே மொழியாக வற்புறுத்திக் கூறுகின்றன. இந்த மதங்களைத் தங்கள் மதங்களாகக் கொள்ளும் ஒவ்வொருவரும் இந்த உண்மையை வாழ்க்கையின் எத்துறையிலும் தம் உள்ளத்தில் உறுதியாக வைத்திருத்தல் வேண்டும்.

## அன்பும் அறனும் உடையவருக்கு வாக்குரிமைச் சீட்டு

இந்த உண்மைகளை இப்போ நடக்கப்போகின்ற பாராளுமன்றத் தேர்தலிலே எவ்வாறு உபயோகிப்பது என்பதே நாம் இப்போ அடுத்தபடியாக அறியவேண்டியது. "அன்பும் அறனு முடைத்தாயி னில்வாழ்க்கை — பண்பும் பயனு மது." என்னும் மறைமொழி தலைசிறந்த வழியைத் தெளிவாகக் காண்பிக்கின்றது. 'இல்லறமல்லது நல்லறமன்று' என்பதும் இங்கே சிந்திக்கவேண்டியது. ஒரு பாராளுமன்ற அபேட்சகர் தமது குடும்பத்தவரில், தமது சுற்றத்தவரில், தமது ஊரவரில், தமது தேசத்தவரில் அன்புடையவராய் வாழுகின்றாரென்று கண்டால் அவருக்கு உங்கள் வாக்குச் சீட்டுகளைப் போடுங்கள். அவர் அறமும் செய்கிறவராயின் நீங்கள் பாக்கியவான்கள். அத்தகைய அன்பில்லாத நெஞ்சம் ஈரமில்லாதது, வரண்டது. அது ஒருபோதும் உங்களில் அன்பு காட்டமாட்டாது இரங்கமாட்டாது. தன் சுயநலத்தை உள்ளுக்கு மறைத்து வைத்துக் கொண்டு பொய்வேடந்தாங்கிப் பொதுநலத்துக்கு உழைக்கிறேன் என்று பொய்மொழிபகரும், அதை நம்பாதீர்கள், ஏமாந்து போகாதீர்கள். உங்கள் வாக்குச்சீட்டுக்களை அத்தகைய ஒருவருக்குப் போடாதீர்கள்.

## பாவஞ் செய்யாதவருக்கு வாக்குச் சீட்டு

அன்புடையர், அறனுடையர், என்று சொல்லத்தக்க ஒருவர் இலராயின் அவர் பாவம் செய்யாதவராயாகுதல் இருத்தல் வேண்டும், பாவம் செய்யும் ஒருவர் நன்று

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# கோட்டு விற்பனவு

புத்தூர் சிதம்பரப்பிள்ளை மகள் செவபாக்கியத்தின் ஆதனம்,

Guardianship No. 578

சிதம்பரப்பிள்ளை கைம்பெண் வள்ளிப்பிள்ளை அல்லது தெய்வானை —புத்தூர் தத்துவகாறி

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 578-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழ் காணப்படும் ஐந்து துண்டுக் காணிகள். 1952 ம் ஆண்டு ஆனி மாசம் 6 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி அளவில் அந்த அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

1. அல்வாய் பெருமியார் குறிச்சியில் இணவோலை என்னும் காணி வ. இ. $3\frac{1}{4}$ இதில் கிழக்குப் பக்கமாக வ. இ. $1\frac{3}{4}$ வீடும் மற்றும் பயிர்களும், கிணற்றில் அரைவாசிப் பங்கும்.

எல்லை கிழக்கு முருகர் காசியர்
,, வடக்கு கணபதிப்பிள்ளை கைம்பெண் சின்னாச்சிப்பிள்ளை
மேற்கு - ஒழுங்கை
,, தெற்கு - கணபதியார் சின்னையா சின்னையா

இதில் சொரியலாக $\frac{1}{81}$ பங்கும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

2. மேற்படி குறிச்சியில் இணவோலை என்னும் காணி வ.இ. $13\frac{3}{8}$
எல்லை கிழக்கும் வடக்கும் சிதம்பரம் அம்பலவாண சுவாமி கோவிலுக்குரிய ஆதனம்.
மேற்கு - நடை வரம்பு
தெற்கு - சின்னத்தம்பர் வேலுப்பிள்ளை

இதில் சொரியலாக $\frac{5}{96}$ பங்கில் சொரியலாக $\frac{1}{6}$ பங்கு,

3. அல்வாயில் வீரகொடிய குறிச்சி இறை இணவோலை என்னும் காணி வ.இ. $12\frac{3}{4}$ மேற்படி தோட்டம் 8
எல்லை கிழக்கு முருகர் சின்னத்தம்பியும் மறுவும் மேற்கும் வடக்கும் நடைவரம்பு
தெற்கு - கணபதிப்பிள்ளை பரமகுருவுக்கும்

இதில் சொரியலாக $\frac{1}{32}$ பங்கும் அதற்குச் சேர்ந்தவைகளும.

4. அல்வாயில் பெருமையார் குறிச்சியில் இணவொல்லை என்னும் காணி வ.இ. $10\frac{5}{8}$ தோட்டம் 2
எல்லை கிழக்கு சிதம்பரம அம்பலவாண சுவாமி கோவிலுக்குரிய ஆதனம்.
வடக்கு - 3-ம் காணியும் மறுவும்
மேற்கு - நடை வரம்பு
தெற்கு - 1 ம் காணி

இதில் சொரியலாக $\frac{3}{16}$ பங்கும் அதற்குச் சேர்ந்தவைகளும.

5. புலோலி கிழக்கில் வெற்றி பாகுதேவன் குறிச்சி வடுவாத்தை என்னும் காணி வ.இ. $17\frac{9}{16}$ அதற்குச் சேர்ந்தவைகளும்.
எல்லை கிழக்கு சுப்பர் குமாரப்பர் மறுவும் வடக்கும் தெற்கும் வல்லியர் சின்னத்தம்பி மறுவும் மேற்கு 5 ம் காணி.

இதில் சொரியலாக $\frac{1}{2}$ பங்கு.

V. A. DURAYAPPAH,
Commissioner, Valuer etc
Jaffna 25-4-52.
M. 24 6—5—52.

உ
இந்துசாதன இயந்திர.

### சென்னை ருயல சீமா பஞ்ச நிவாரண நிதி

| | | ரூ | ச |
|---|---|---|---|
| | முன் வரவு | 10 | 00 |
| கா. இ. | | 2 | — |
| சி. சு. | | 2 | — |
| | | 14 | — |

பணம் உதவும் அன்பர்கள் இந்துசாதனக் காரியாலயத்திற்கு அனுப்புக

### விற்பனவுக்கு

2400 மைல்கள் சொந்தப்பாவிப்பில் ஓடினதுமான மிகவும் உயர்தரமானஒரு A40(C L 7000 இலக்க வரிசையிலுள்ள) கார் ரூபா 6500 க்கு குறையாமல் விற்பனவுக்கு வலிகாமம் கிழக்குப் பகுதி பிரிவுக் காரியாதிகாரியின் வீட்டில் இருக்கிறது.

M 26 6-5, 9-5

## உண்மை நெறி விளங்கிய உமாபதி சிவாசாரியர்

( 2-ம் பக்கத் தொடர்ச்சி )

### உமாபதி வந்தாற் கொடியேறும்

உற்சவகாலமணைந்தது. உமாபதியாரையின்றிக் கொடியேற்ற முயன்றனர் தில்லையுள்ளார் கொடி ஏறுகின்றது. துன்புற்றனர் தில்லையுள்ளார். "உமாபதி வந்தாற் கொடி ஏறும்" என்று ஒரு அசரீரி ஆகாயத்திற் கேட்டது. கொற்றவன் குடியாரிடம் சென்று திருத்தொண்டிக்கு வருமாறிரந்தனர் தில்லைவாழந்தணர். சுவாமிகள் தில்லையை அடைந்து

"ஒளிக்கு மிருளுக்கு மொன்றே
யிடமொன்று மேலிடிலொன்
றொளிக்கு மெனினு மிருளட
ராதுள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள
தேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிருய் யக்கூடும்
படிக்கொடி கட்டினனே"

என்று தொடக்கிக் கொடிக்கவி பாடுதலும் கொடி ஏறிற்று.

இதன் பின் சுவாமிகள் பெற்றான்சாம்பானுக்கும் முள்ளிச் செடிக்கும் தீக்கை செய்து முத்தி கொடுத்தார். அவர் சிவப்பிரகாசம், உண்மைநெறி விளக்கம், நெஞ்சுவிடுதூது, வினாவெண்பா, திருவருட்பயன், சங்கற்பநிராகரணம், போற்றிப்பஃறொடை ஆகியவற்றுடன் கொடிக்கவியும் பிற சில நூல்களும் செய்தார்,

## வெங்காய வரவு

சென்னையிலிருந்து 4500 தொன் வெங்காயம் அணிமையில் வருமென்று அறியவருகிறது. இது இந்த இப்போதுள்ள நெருக்கடியை நீக்கும்.

## மந்திரிகளுக்குப் பொலிஸ் காவல்

தென் ஆபிரிக்க மந்திரிகள் வீடுகள் எல்லாம் பொலீசாரால் காவல் செய்யப்படுகின்றன. இந் நாட்டின் சரித்திரத்தில் இப்படிப் பட்ட ஒழுங்கு இப்பொழுதே முதல் முறையாகச் செய்யப்படுகின்றதாம்.

உ

சிவமயம்

அடைக்கலந் தோட்டம் கந்தசுவாமி கோவில் 1951 - ம் ஆண்டு ஆனி மாதம் நடந்த கும்பாபிஷேகத்தின்

## வரவு செலவுக் கணக்குகள் விபரம்

**வரவு**

| | ரூபா. | சதம். |
|---|---|---|
| யாழ்ப்பாணத்திலும் மற்றும் இலங்கையிலுள்ள இடங்களிலும் சேர்ந்ததொகை | 6,023 | 45 |
| சிங்கப்பூரிலும் மலேயாவிலும் சேர்ந்த பணம் | 945 | 50 |
| மொத்தம் | 6,968 | 95 |
| கூடிய செலவு | 3 | 86 |
| | 6,972 | 81 |

**செலவு**

| | ரூபா. | சதம். |
|---|---|---|
| நாலுபண்டிகை வேலைகளுக்கு (அதாவது பிள்ளையார், கந்தசுவாமியார், சண்டேசுரர், மணிக்கூட்டுக்கோபுரம்) ஆசாரி ராசாவைத்துக்குக் கொடுத்த கூலி | 1,089 | — |
| மேற்சொல்லிய பண்டிகை வேலைகளுக்கும் மூன்று யாகசாலைகளுக்கும் வேண்டிய சாமான்களுக்கும் கூலியாட்களுக்கும் செலவழிந்த பணம் | 1,954 | — |
| வாலஸ்தாபனத்துக்குச் செலவழிந்த பணம் | 239 | 26 |
| கும்பாபிஷேகத்திற்கு செலவழிந்தபணம் | 2,674 | 16 |
| சங்காபிசேகத்திற்கும் மகேஸ்வரி பூசைக்கும் செலவழிந்த பணம் | 1,016 | 39 |
| | 6,972 | 81 |

இந்தக் கணக்கில் ஸ்ரீமதி நாகநாதர் முருகேசு அவர்களால் கொடுக்கப்பட்ட 601 ரூபாய் பெறுமதியான மூலஸ்தானக் கதவு சேர்க்கப்படவில்லை.

க. இராசு
பராமரிப்புக்காரருக்காக.

M 25 6—5—52.

# உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கணிப்பது.

எங்கள் சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 11—5—52——17—5—52

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இந்த வாரத்தின் முதல்நாள் உமது புதுமுயற்சித்திட்டம் தலைகீழாகக்கூடும். திங்களும் மனச்சலனத்தை உண்டாக்கக்கூடும். புதன்கிழமையின் பின் எல்லாம் திருந்தும். திட்டங்களை முன்வைக்கலாம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

சொந்தக் காரியங்களுக்கு ஞாயிறும் திங்கள் காலையும் நல்லகாலம். திங்கள் பிற்பகல் செவ்வாய் புதன் சில கஷ்டங்களை உண்டாக்கக்கூடும் இந்த வாரம் தேகசுகவீனத்துக்கும் இடமுண்டு.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

வாரத்தின் முதல் நாலுநாட்கள் உத்தியோக காரியங்களுக்கு நல்லகாலம். வெளியூரிலிருந்து சுபசெய்தி வரும். மேலதிகாரிகளின் உதவியும் தனலாபமும் உண்டு. புதன் பிற்பகல் வியாழன் வெள்ளி கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

இந்தவாரம் வியாபார விஷயத்தில் சில சித்தியுண்டாகும். பிறதேசங்களிலிருந்து நல்ல புதினம் வரும். ... வெள்ளி பிற்பகலும் சனியும் மந்தமான காலம்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1ம் பாதம்.

இந்தவாரம் அதிட்டலாபப்பணமும் புகழுமுண்டு. உத்தியோகத்துறையிலும அதிக திருத்தமுண்டு குடும்ப சமாதானம் மிககன்றாயிருக்கும், முயற்சிகளை முன்னேற்றுக.

**கன்னிராசி** உத்திரம 2,3,4ம் பாதம அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இந்தவாரம் தொடக்கம் தேகசுகம் திருந்தும். பண நெருக்கடியும் கொஞ்சங் குறையும். ஆனால் புது விஷயங்களில் ஆறுதலாகச் சென்று பிழையான எண்ணங்களைத் தவிர்க்கவும்.

**துலாம்** சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

இந்த வாரம் நினைத்த காரியம் சித்தியாகும் உத்தியோக உயர்ச்சி அல்லது நல்ல இடமாற்றம் உண்டாகக் கூடும். எதிர்ப்புக் கரைந்துபோகும். வாரத்தின் இறுதி இரண்டு நாட்களையும் கவனமாகக் கழிக்கவும்.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

இந்த வாரம் தொடக்கம் கருமங்களில்கவனமாயிருக்கவேண்டும் பணத் தொந்தரவுக்கு இடமுண்டு. வழக்கமான முயற்சிகளுக்கு நல்ல காலம். ஆனால் புது வியாபார விஷயங்களில் கவனமாயிருக்கவேண்டும். வாக்குவாதத் தன்மையைத் தவிர்க்கவும்,

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

இந்த வாரம் பணத்துறையிலும் சமூகத் தொடர்பிலும் நல்லகாலம். புது முயற்சிகள் விரும்பிய நன்மையைத்தரும். குடும்பசமாதானமும் பசமும் நிச்சயம். வார இறுதியில் ஆலோசனைப்படி இலாபம் உண்டு.

**மகரராசி** உத்தராடம் 2,3, 4ம் பாதம திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

கவனமாயிருந்தால் இந்த வாரம் பணம் மிச்சமாக்கலாம். போட்டியிடுவோரை வெல்லலாம். வார இறுதியில் சில பிழை விளக்கங்களுக்கும் சிறு உத்தியோகத்தொந்தரவுகளுக்குமிடமுண்டு

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம.

இந்த வார வரவு செலவு சமாளிப்பது கஷ்டம். நண்பர்களுடனும் இனத்தவர்களுடனும் கூடாடுவதில் கவனமாயிருக்கவும். தேவையில்லாத இழி மொழியும் மனச்சலனமும் உண்டாகக்கூடும், சித்தியடைவதற்கு மிகவும் முயலவேண்டும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

சிறு உத்தியோகத் தொந்தரவுகளைத் தவிர இந்த வாரம் நல்லாயிருக்கும். எதிரிகள் நாசமும் புகழும் நிச்சயம். வார இறுதியில் சில சந்தோஷமான குடும்ப விஷயங்கள் சிறு பண நெருக்கடியை உண்டாக்கக்கூடும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் இளமைப்பருவத்தை அடைய
சி. எம். சாமி

# தங்கபஸ்பம்

உபயோகியுங்கள்
தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரத்த விருத்தியும் உண்டாக்கும். இல் வாழ்க்கையில் அதியற்புத சுகந்தரும நீரழிவு, பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25—0—0

## குருபஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும். அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20
மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனம்)

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம்ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை,

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Tuesday May 6. 1952.

## பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம் உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00

பிரதோஷவிரதமான்மியம் (புதிய பதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40

வில்லி பாரதம் - புட்ப யாத்திரைச் சருக்கம் பண்டிதர், ம. வே திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள்விளக்க விரிவுரை, நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ்ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைக்குப், பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரூ 1—25ச

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள்சரித்திரம் திருவாசகத்திரட்டுடன் மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகாநந்தசபையார் நடத்தும் சைவசமயபாடப்பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரூ 1—20 ச.

உலகம்பலவிதக்கதை I. (கோபாலநேசரத்தினம்) டை பண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத் தெவிட்டாதது. விலை ரூ. 1—25ச.

ஈழமண்டல சதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது; இலங்கையின் மான்மியத்தை எடுத்து விளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ. 1.00

சைவசமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை ச 45.

'ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத்தக்கது. முந்தி வெளிவராதது. விலை 60 சதம் (அணா 10)

புலியூர் (யமக) அந்தாதி மாதகல் மயில்வாகனப்புலவர்இயற்றியது, ஆசிரியர் ம. க. வேற்பிள்ளைசெய்த உரையுடன் விலை சதம் 50.

முற்பணமனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்.

Apply: to PANDIT V. T. SAMBANDHAN Vannarponnai, Jaffna

கற்றோர்க்கழகு கசடற மொழிதல்

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ருணிமார்க்ஓடுகள்
13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2

## சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கும். தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோயகளும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50, கால்றுத்தல் விலை ரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

### சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினால் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரிந்தல் முதலிய சகல துர்க்குணங்களையும அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை
ஏமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு
கோட்டைமுனை, மட்டக்களப்பு.
M 196 1-2—30-4-52.

## வாக்காளர் களுக்கு நல்வழி ஒன்றே ஒன்று

3-ம் பக்கத் தொடர்ச்சி

இது நீது இது என்று பகுத்தறியும் அறிவில்லாதவரென்றறிக. அவர்மாட்டு அருட்குணமும் உண்டாகமாட்டாது. அப்படிப்பட்ட ஒருவர் செய்யும் நன்மை என்பது, அவருடைய உள்ளத்தில் மறைந்து நிற்கும் சுயநலவேட்கையால் உந்தப்படுவது என்பதுணர்க. அவருடைய சுயநல வேட்கை வேறுபடுவதற்குத்தக்கவாறு அவருடைய செயல்களும் வேறுபடும். "தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றற்றேரின் - அருளாதான் செய்யும் அறம்' என்னுந் திருக்குறள் எவ்வளவு அழகாக இந்த உண்மையை விளக்குகின்றதென்பதைப் பாருங்கள். பாவங்களுள் ஐந்து, மா பாதகங்களென்று சொல்லப்படுகின்றன. அவற்றுள்ளே ஒன்றையோ பலவற்றையோ ஒருவர் தமது வாழ்க்கையிற் செய்பவராயின் அவருக்கு உங்கள் வாக்குச் சீட்டுக்களைக் கொடாதீர்கள். இவற்றுள் பொய்யும், களவும் பாராளுமன்ற அங்கத்தவரால் தங்கள் பதவியின் உதவியைக் கொண்டு செய்யத்தக்கன. இங்கே பொய் எனப்படுவது ஒருவர் சொன்னபடி செய்யாது விடுதல், உண்மையை மறைத்துப் பேசுதல், திரித்துப் பேசுதல் என்ற பிரிவுகளில் வைக்கவேண்டியது. களவு எனப்படுவது, கைலஞ்சம் வாங்குதல் கொடுத்தல், வாக்குச் சீட்டுக்கள் பெறுவதற்காக நீதி நெறிப்படி ஒருவருக்குப் போகவேண்டிய ஒரு நன்மையை இன்னொருவருக்குப் பெற்றுக்கொடுத்தல், முதலியனவாம் இவ்வித நன்மைகளைப் பெற்றவர்களே, இப்படிப்பட்ட ஒருவர், தருணத்துக்குத் தக்கபடி தன் சாதிக்குந் துரோகஞ் செய்யத்தக்கவர் என்பதை உள்ளத்திற் கொள்ளவேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு உங்கள வாக்குச்சீட்டுக்களை ஒருவரும் போடாதீர்கள்.

### கட்சி என்பது இது

இனி, கட்சி என்ற சொல்லைக் கண்டு உண்மைக் கருத்தை மறக்கக் கூடாது. பல அங்கத்தவர்கள் சேர்ந்ததே கட்சி. அயோக்கியர்-பாவிகள் - அங்கத்தவரானல் கட்சி யோக்கியமாகமாட்டாது. யோக்கியர் அங்கத்தவரானல் கட்சி அயோக்கியமாகவும் மாட்டாது. அதர்மம் நிலைக்கமாட்டாது. தருமமே நிலைநிற்கும். தமிழ் மக்கள் வாழ்க்கையின் உயரிய குறிக்கோளை உணரும் பெற்றியர் தருமத்தையே தளர்வின்றிக் கடைப்பிடித்தொழுகுவர்.

### நல்வழியினர் நல்லனகொள்ளுவர்

என்வே நல்வழியில் ஒழுகித் துன்பத்துக்கு ஏதுவானவற்றைத் தவிர்த்து இன்பத்தைத் தமக்கும் தம் நாட்டுக்கும் பெற விரும்புவோர் நாம் மேலே கூறியவற்றை நல்லனவாகக்கொண்டு களிப்பர். சுயநலத்தையே மறைந்த குறிக்கோளாகக்கொண்டு துன்பவழியிற்-பாவவழியிற் செல்லும் பான்மையோர் - அல்லனவென்று தள்ளுவர்.

கல்லாத மாந்தர்க்குக்
  கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க்
  கறங்கூற்றம் — மெல்லிய
வாழைக்குத் தானீன்ற
  காய்கூற்றங் கூற்றமே
இல்லிற் கிசைந்
  தொழுகாப் பெண்.

புண்ணியமாம் பாவம்போம்
  போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு
  வைத்தபொருள்-எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை
  யெச்சமயத் தோர்சொல்லும்
தீதொழிய நன்மை செயல்,